ஹாலிஎல பிரதேச சபை - 2022

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹாலிஎல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்கள் தொடர்பான கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹாலிஎல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஹாலிஎல பிரதேச சபை விளையாட்டு அரங்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 35,405,373 தொகை மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்டத்தின் கீழ் வாகனங்களுக்காக டயர்களை இடுவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,296,450 தொகை நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது சபைக்குரிய செலவினங்கள் பிரதேச அபிவிருத்தி உதவி செயற்றிட்ட வங்கிக் கணக்கில் இருந்து செலுத்தப்பட்ட தவறை சரிசெய்யும் போது அந்த செலவினம் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினமாக ரூபா 6,711,381 இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி மீளளிப்பு செய்யப்பட்ட 08 வேலைகளுக்குரிய பெறவேண்டிய ரூபா 5,131,139 கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 2022 செப்டெம்பர் 31ஆம் திகதி வரையும் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 7,239,556 ஆன 07 வேலைகள் நிதி நிலமைக் கூற்றில் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஊ) | 2018 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்குரிதாக தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 1,131,471 தொகை மீண்டும் கடன் கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்ட ரூபா 7,019,194 ஆன வேலைகள் மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் மீதி கணக்குகளில் தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்யப்படும். | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகைக்கும், பட்டோலைகளின் பிரகாரம் ஆன கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 302,569 வேறுபாடு காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் வேறுபாடுகளை இனங்கண்டு மீதிகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 138,193,270 ஆன இயந்திர உபகரணங்கள், வேலைக் கடன்கொடுத்தோர், நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான விரிவான பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவற்கு போதியளவான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 2011 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை உத்தியோகத்தர்களுக்கு 05 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு பணிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 235,048 முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிகள் நிறைவு பெற்றவுடன் முற்பணங்கள் விரைவாக தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.15,211,206 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,417,043 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | ஆதன வரி | 2,669,895 | 2,666,279 | 2,072,265 | 594,014 | 3,363,908 | 2,377,818 | 1,311,319 | 1,066,499 |
| (ii) | வாடகை | 3,885,902 | 3,934,032 | 3,364,203 | 569,829 | 2,751,902 | 3,672,260 | 1,781,435 | 1,890,825 |
| (iii) | ஏனைய வருமானம் | 1,418,800 | 1,693,608 | 1,341,333 | 352,275 | 1,380,000 | 1,582,462 | 1,254,728 | 327,734 |
| | மொத்தம் | 7,974,597 | 8,293,919 | 6,777,801 | 1,516,118 | 7,495,810 | 7,632,540 | 4,347,482 | 3,285,058 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதனவரியும் வரியும் ரூபா 2,036,695 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற சபைக்குச் சொந்தமான கட்டிடத்திற்கான நிலுவை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை ரூபா 135,890 மற்றும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவைக் கடை வாடகை ரூபா 2,013,815 என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 379,482 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரதரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 10,943,504 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 14,406,196 என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலுவை வருமானத்தை விரைவாக பெறுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட கழிவுப் பொருள் எரித்தல்/ அகற்றுதலுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 2.4 இன் பிரகாரம் கூட்டுப்பசளை செய்யமுடியாத கழிவுப் பொருட்கள் திறந்த நிலத்தில் அகற்ற முடியாதிருந்ததுடன் இயலுமான வரை மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் வேறு பிரிக்கப்பட்டு மீள்சுழற்சிக்கு அனுப்பப்படல் வேண்டும். எனினும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கழிவுப் பொருட்கள் நாளாந்தம் வேறு பிரிக்கப்பட்டதன் பின்னர் உக்காத கழிவுப் பொருட்களின் கணிசமான அளவு முகாமைத்துவ நிலைய வளவில் திறந்தவாறு போடப்பட்டிருந்தது. | ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் இடவசதிகள் போதியளவில் இல்லாமையை உள்ளடக்கிய வளபற்றாக்குறை காணப்படுகின்றமையால் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்து. | உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்கு அனுப்பப்படல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதிஏற்பாட்டின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட ஹாலிஎல பிரதேச சபை பொது விளையாட்டரங்கின் நினைவுக் கல்லில் தற்போதைய பிரதேச சபையின் 40 உறுப்பினர்களின் பெயர் நிரலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. நினைவுக் கல்லிற்காக ரூபா 204,000 செலுத்தப்பட்டிருந்தது. | சபை தீர்மானத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. | செலவினங்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் ஹாலிஎல பொது மக்கள் விளையாட்டரங்கு ரூபா 18,695,911 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. விளையாட்டு மைதானத்தில் புற் பிடிகளை நட்டுவதற்குரிய ரூபா 3,300,500 செலவினம் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2023 சனவரி 18 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது விளையாட்டு மைதானத்தில் புற்பிடிகள் இடை இடையே இறந்து நிலம் தெரிவதைக் காணக்கூடியதாக இருந்தது. அபிவிருத்தி நடவடிக்கைகளை பூர்த்தி செய்து வேலையினை பிரதேச சபைக்கு கையளிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது விளையாட்டு மைதானத்தில் புற்களை நடுதல் தொடர்பான குறைபாடுகள் காணப்பட்ட போதும் விளையாட்டரங்கு சபைக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்த குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் பரியிரிட்டு உரிய பிரகாரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலையின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றாமல் மற்றும் எந்தவொரு நியமனக் கடிதமும் விநியோகிக்கப்படாமல் விளையாட்டு மைதானத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளின் தேவையினைக் காண்பித்து நாளாந்த சம்பள கொடுப்பனவு அடிப்படையில் 04 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு 2022 யூன் 02 ஆந் திகதி முதல் 2022 திசம்பர் 31 வரை ரூபா 811,472 சம்பளம் பொது நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்த போதும் விளையாட்டு | உள்ளூராட்சி ஆணையாளரின் 2023.03.03ஆம் திகதிய 12/1/8/1/6 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதவியணியினரை அங்கீகரித்து ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அவர்களிடமிருந்து போதியளவான சேவையை பெறுதல் வேண்டும். |

மைதானத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் போதியளவான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமாமன ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டார் கிரேடர் இயந்திரம் செயற்படுத்துனர் இல்லாமையால் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உடுவர உப அலுவலக வளவில் பயனற்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | இந்த இயந்திரத்திற்காக சேவை தேவை குறைவடைந்திருந்ததுடன் தேவையான சந்தர்ப்பங்களில் பெகோ இயந்திர செயற்படுத்துனர் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றார். | சேவை தேவையுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கிராமிய மற்றும் பாடசாலை, விளையாட்டு உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி ஹாலிஎல பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் பிரதேச சபையினால் ரூபா 35 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஹாலிஎல பிரதேச சபை விளையாட்டரங்கின் பொது மலசல கூடத்தை நிர்மாணிக்கும் வேலைக்காக ஹாலிஎல பிரதேச செயலாளருடன் ரூபா 3,500,000 தொகையின் கீழ் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன் படிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் நிர்மாணத்திற்காக ரூபா 991,735 விவசாய அமைப்பிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு கிடைப்பதில் உள்ள தாமத்தின் காரணமாக இந்த குறைபாடு ஏற்பட்டுள்ளது. நிதிஏற்பாடு கோரி உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,392,358 ஆன 03 நிர்மாண வேலைகளின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 20 நாட்கள் கடந்திருந்த போதிலும் அந்த நிர்மாணங்களில் அத்திவாரம் வெட்டுதல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் 02 நிர்மாணங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணத்தின் வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து உடுநுவர கொல்லுவத்த வீதியின் வடிகாண்களை அமைக்கும் நிர்மாண வேலைக்காக செலுத்தும் போது விடய இலக்கம் 02, 03 மற்றும் 04 இற்காக ரூபா 174,781 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட வடிகாணின் ஆரம்பம் முதல் தெற்கு பக்க சுவரில் 02 மீற்றர் தூரத்தில் குழி ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட குழியின் தூர அளவில் வடிகாணின் உள்ளே தெற்கு பக்கத்தின் சுவர் முழுமையாக பிரிந்து காணப்பட்டது. தோண்டப்பட்ட இடங்களில் வடிகாணின் சுவரின் 0.3 மீற்றர் உயரத்துடன் பள்ளம் சேர்ந்து காணப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மேலதிகக் கொடுப்பனவுகளை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு அதிகார பத்திரத்தில் நிபந்தனை இலக்கம் 2.7 இன் பிரகாரம் கூட்டுப்பசளை உற்பத்தி அலகின் செயற்படு நிலையின் போது உருவாகின்ற கழிப்பொருள் பொருத்தமான பிரகாரம் சுத்திகரித்து அகற்றுதல் அல்லது மீண்டும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிச் | ஊழியர்களின் பற்றாக்குறை மற்றும் இடவசதிகள் போதியளவில் இல்லாமையினை உள்ளடக்கிய வளப் பற்றாக்குறை காணப்படுகின்றமையினால் இவ்வாறு ஏற்பட்டிருந்தது. | முறையாக கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும். |

சுற்றாடலுக்கு வழிந்தோடக்கூடிய வகையில் இடமளிக்க முடியாது. எனினும் திறந்தவெளியின் நிலப்பரப்பில் போடப்படுகின்ற கழிப்பொருட்களில் இருந்து உருவாகின்ற கழிவுகள் மழை காலத்தின் போது வழிந்தோடி பந்துளுஓயா நீர்த்தேக்கத்திற்கு செல்லும் ஆபத்து காணப்பட்டது. மேலும் அகற்றப்படுகின்ற பொலித்தீன் உறைகள் உயிரினங்களினால் இளுத்துச் செல்லுதல் மற்றும் காற்றில் பறந்து செல்கின்றமையால் அருகிலுள்ள சுற்றாடலிலும் இடையிடையே பொலித்தீன் உறைகள் பரந்து காணப்பட்டது.